**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 5 March 2026

# கரையோரப் பூந்தோட்டங்களில் புதிய சதுப்புநிலப் பகுதி

**யோகிதா அன்புச்செழியன்**

‘வெட்லண்ட்ஸ் பை த பே’ (*Wetlands by the Bay*) எனப்படும் புதிய சதுப்புநிலப் பகுதியைக் கரையோரப் பூந்தோட்டங்கள் அறிமுகப்படுத்தவுள்ளது.

இது, தற்போதைய கிங்ஃபிஷர் சதுப்புநிலத்தின் (Kingfisher Wetlands) பரப்பளவைவிட மும்மடங்கு பெரியதாக அமையும்.

மேலும், இதில் மரங்களின் உச்சியினூடாக வெகு உயரத்தில் அமைக்கப்பட்ட நடைபாதையும் (canopy boardwalk), பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் சமூக நடவடிக்கைகளுக்கும் சிறப்பாக ஒதுக்கப்பட்ட புதிய பகுதியும் அமைந்திருக்கும்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது, தேசிய வளர்ச்சித் துணை அமைச்சர் ஆல்வின் டான் இதை அறிவித்தார்.

விரிவாக்கம் செய்யப்பட்ட சதுப்புநிலப் பகுதியில் 600க்கும் மேற்பட்ட கடலோரத் தாவரங்கள் இடம்பெறும். பார்வையாளர்கள் அங்குப் படகுச் சவாரி செய்யலாம்.

மேலும், எளிதில் சென்றடையும் வசதியை மேம்படுத்தும் வகையில், சதுப்புநிலத்தின்மேல் புதிய நடைபாதை அமைக்கப்படும்.

அது, கரையோரப் பூந்தோட்டங்களின் பெருவிரைவு ரயில் நிலையத்தை பே சவுத் தோட்டத்தில் உள்ள முக்கியச் சுற்றுலாத் தலங்களுடன் இணைக்கும்.

சிங்கப்பூரின் நீர்நிலைகளைப் பாதுகாப்பது அமைச்சின் மற்றொரு முக்கிய முன்னுரிமை என்ற துணை அமைச்சர் டான், பொழுதுபோக்கு, பாதுகாப்பு, ஆராய்ச்சி, கல்விக்கான கூடுதல் வாய்ப்புகளை வழங்கும் வகையில், இந்த ஆண்டு லாசரஸ் சவுத் (*Lazarus South*), கூசு ரீஃப் பகுதிகளில் இரண்டாவது கடல்சார் பூங்கா அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது என்றார்.

இந்தக் கடல்சார் சூழல்களைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள, $60 மில்லியன் முதலீட்டில் புதிய கடல் அறிவியல் ஆராய்ச்சிச் சிறப்பு மையம் நிறுவப்படவுள்ளது. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் நிர்வகிப்பிலும், ‘ஆராய்ச்சி, புத்தாக்கம், தொழில்முனைப்பு 2030’ (RIE2030) நிதியுதவியுடனும் மையம் செயல்படவுள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, வெஸ்ட் கோஸ்ட் பூங்கா, லாப்ரடார் இயற்கைப் பூங்கா இரண்டும் மேம்படுத்தப்படும்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.